2012 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். எங்களுடைய தென் மாவட்டங்களில் மல்லிகைப் பூவினுடைய விளைச்சல் மிக அதிகமாக இருக்கிறது. திண்டுக்கல், சிலுக்குவார்பட்டி, மதுரையினுடைய சோழவந்தான் பகுதி போன்ற பகுதிகளில்—சிதம்பரத்திற்கு வழங்கியிருக்கக்கூடிய பதில் மிகவும் நம்பிக்கையளிக்கிறது. ஆகவே, நம்முடைய மாநிலத்தில் எங்கெல்லாம் இந்த மல்லிகைப் பூ விளைகிறதோ அந்தப் பகுதிகளைக் கண்டறிந்து, ஒரு வாசனைத் திரவிய தொழிற்சாலையை உருவாக்கினால்கூட அது மாநில அரசுக்கும் பயன்படும், மக்களுக்கும் பயன்படும், குறிப்பாக விவசாயிகளுக்கும் பயன்படும். அதுகுறித்து எதிர்காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்ட சுற்றுப் பகுதிகளில் விளையும் மல்லிகைப் பூ, மாலைகள் மற்றும் பூ வியாபாரம் போன்ற அன்றாட பயன்பாட்டிற்கே பெரும்பாலும் பயன்படுகின்றது. மல்லிகைப் பூ ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் அதிக அளவில் கிடைக்கப் பெறுகின்றது. அப்பருவ காலத்தில் மட்டுமே மேற்காணும் தொழிற்சாலைகளை இயக்க வாய்ப்பிருக்கிறது. தொடர்ந்து இயக்க முடியாது. மற்ற காலங்களில் அந்தத் தொழிற்சாலைகளை Shut down– செய்து மூட வேண்டியது இருக்கும். அந்த அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மல்லிகைப் பூ சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலை மிகுந்த இலாபம் தரக்கூடிய தொழிற்சாலையாக அமையப் பெறவில்லை. எனவே, இதில் சாத்தியக்கூறு இல்லை என்பதை நான் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

106—

வரத்துக் கால்வாய்

***6487—திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, மானூர், பள்ளமடை குளங்கள் பயன்பெறும் வகையில் பாபநாசம் அல்லது கடனா அல்லது சிற்றாற்றிலிருந்து கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டம், மானூர் கிராமத்தில் மானூர் குழுமம், பள்ளமடை கிராமத்தில் பள்ளமடை குழுமம் அமைந்துள்ளன. இச்சிற்றாற்றின்கீழ் உள்ள 136 குளங்களில் இவை இரண்டும் பெரிய குளங்களாகும். போதுமான அளவு மழை பெய்யாத காலங்களில் இவ்விரண்டு குளங்களும் முழுமையாக நிறைவதில்லை. அதனால் இவ்விரண்டு குளங்களில் விவசாய சிற்றாறு பாசன நீர் தவிர தாமிரபரணி அல்லது கடனா நதியிலிருந்து புதிதாக கால்வாய் அமைக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். சிற்றாற்றிலிருந்து கால்வாய்மூலம் ஏற்கெனவே மானூர் மற்றும் பள்ளமடை குளங்கள் பாசனம் பெறுகின்றன. ஆனால், இக்குளங்கள் கடைமடை பகுதிகளில் இருப்பதால் தண்ணீர் போதிய அளவு கிடைப்பதில்லை. கடைநிலை நீர்த் தேக்கத்திலிருந்து வரும் உபரி நீரை மானூர் மற்றும் பள்ளமடை குளங்களுக்குக் கொண்டு செல்வதற்கான ஆய்வுப் பணிகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆய்வின் முடிவு வந்தவுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

2012 ஏப்ரல் 17]

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். திருநெல்வேலி தொகுதி, மானூர் ஒன்றியம் மிகவும் தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி. சிற்றாறு பாசனம்மூலம் நீர் கிட்டத்தட்ட 33 கிலோ மீட்டர் பாய்ந்து வீரகேரளம்புதூர் தாலுகா, நமது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரனுடைய சொந்த ஊரான தாயார் தோப்பில் ஒரு அணை கட்டப்பட்டு, அந்த அணையிலிருந்து பள்ளிக்கோட்டை கால்வாய் மூலமாக பள்ளமடை குளங்களுக்கும், மானூர் கால்வாய் மூலமாக மானூர் குளங்களுக்கும் தண்ணீர் வர வேண்டும். அதிகமாக மழை பெறுகின்ற காலங்களில்கூட தண்ணீர் அந்தப் பகுதிகளுக்கு வந்து சேர்வதில்லை. காரணம், அந்தப் பகுதி வானம் பார்த்த பூமியாக இருக்கின்றது, அந்தப் பாசனத்தால் பயன்பெறுகின்ற 20 குளங்களில் கடைசி குளமாக அது இருக்கின்றது. சுமார் 2,000 ஏக்கர் நிலம் பாசன வசதி தருகின்ற அந்தக் குளம், 1,120 ஏக்கர் பரப்பளவு கொண்ட குளமாகும். அந்தப் பகுதியில் இருக்கின்ற மானூர், மாவடி, எட்டான் குளம், மதவக்குறிச்சி, பள்ளமடை போன்ற ஊராட்சிகளில் கிட்டத்தட்ட சுமார் 40 கிராமங்கள் பயன்பெறவேண்டிய பகுதிகளாக இருக்கின்றன. நெல்லை மாவட்டத்தில் 10 அணைக்கட்டுகள் இருக்கின்றன என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். நீங்களெல்லாம் அந்தப் பகுதிக்கு வந்திருக்கிறீர்கள்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னை சாட்சியாக அழைக்காதீர்கள். கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மணிமுத்தாறு, பாபநாசம், பச்சையாறு, குடமுடியாறு, குண்டாறு, அடவிநயினாறு அணை, கறும்பா நதி உள்ளிட்ட அணைக்கட்டுகளெல்லாம் அங்கே இருக்கின்றன. அந்த அணைக்கட்டுகளில் குறிப்பாக எடுத்துக்கொண்டோம் என்றால், குண்டாறு அணைக்கட்டு 50 மில்லியன் கன அடி கொள்ளளவும், ராமநதி அணை 160 மில்லியன் கன அடி கொள்ளளவும், கொடுமுடியாறு அணை 260 மில்லியன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நயினார் நாகேந்திரன், கேள்விக்கு வாருங்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது திருக்குறளைப்போல சிறிய கேள்வி, ஆனால் விஷயம், பெரிய விஷயம். எப்படி என்று கேட்டீர்களென்றால், இந்தக் குளம் 266 மில்லியன் கன அடி நீர் கொள்ளளவு கொண்டது. ஒரு முறை குளம் நிரம்பினால், 8 ஆண்டுகளுக்கு, இப்பகுதியிலுள்ள 40 கிராமங்களில் நிலத்தடி நீர் குறையாமலே இருக்கும். இப்பகுதி மழை குறைவாக உள்ள பகுதி. நீங்களெல்லாம் சென்னையில் இருக்கிற காரணத்தினாலே உங்களுக்கு வானம் பார்த்த பூமியாக இருக்கக்கூடிய பகுதியினுடைய பிரச்சினைகள் எல்லாம் தெரியாது. அதனால்தான் நான் இதைச் சொல்ல வருகிறேன்.

நெல்லை மாவட்டத்தில் 2 பெரிய குளங்கள் இருக்கின்றன. நெல்லை மாவட்டத்தில் விஜயநாராயணபுரம் குளம்தான் மிகப் பெரிய குளம். அதற்கடுத்தாற்போல் இருக்கிற குளம் இந்த மானூர் குளமாகும். அதற்கு ஏற்கெனவே அரசு தரப்பில் சுமார் 120 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு அரசுக்கு வந்திருப்பதாக நான் கேள்விப்பட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்காமலேயே கொடுக்கின்ற மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு அதை எடுத்துச்சென்று—வானம் பார்த்துக் கொண்டு, வெகுகாலமாக ஏங்கிக்கொண்டிருக்கும் அந்தப் பகுதி மக்கள் தங்களுடைய வாழ்வாதாரங்களை உயர்த்துவதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்களை நோக்கிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்—மானூர், பள்ளமடை குளங்களுடைய அந்தத் தேவையை பூர்த்தி செய்து தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியின் சுருக்கமே, அந்தக் கால்வாய் அமைப்பதால் மானாவாரி நிலங்கள் பயன்பெறும் என்பது. வானம் பார்த்த பூமி என்பது மானாவாரி நிலங்கள். தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருக்குறள் மாதிரி கேள்வியைக் கேட்கிறேன் என்று சொல்லிவிட்டு, இராமாயணம் மாதிரி கேள்வியைக் கேட்டிருக்கிறார். (சிரிப்பு)

2012 ஏப்ரல் 17]

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்த ஆய்வின் முடிவு வந்தவுடன், உடனடியாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாதகமாகத்தான் பதில் சொல்லியிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையான நந்தன் கால்வாய்த் திட்டத்தை விரைந்து நிறைவேற்றித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. பி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, ஆலங்குளத்திலுள்ள கால்வாயின் பெயரே மதிகெட்டான் கால்வாய் என்பதாகும். ஆகவே, அந்த மதிகெட்டான் கால்வாயை மதியுள்ள கால்வாயாக மாற்றுவதற்கு—ஏற்கெனவே அந்தக் கால்வாயின் குளம் மேடாக இருக்கிறது. அதனுடைய தலைப்பாகம் பள்ளமாக உள்ளது—ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் இந்தப் பொற்கால ஆட்சியில், அந்தக் குளம் தண்ணீர் பெறுவதற்காக இந்த மதிகெட்டான் கால்வாயைச் சீரமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

[2012 ஏப்ரல் 17

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றபோது, மதிகெட்டான் கால்வாய் என்று சொல்லியிருக்கிறார். இந்த மதிகெட்டான் கால்வாய் ஆழப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அந்தப் பெயர் மாற்றம் என்பது முடியாது என்பதையும் இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்திலுள்ள பஞ்சந்தாகி கண்மாய், சிறுகுளம் கண்மாய், கேசவபுரம் கண்மாய், பெரியகுளத்தில் இருக்கின்ற கண்மாய்களெல்லாம் பெரிய கண்மாய்களாக இருக்கின்றன. தனியாரால் ஆக்கிரமிக்கப்பட்டு அந்தக் குளங்கள் நீண்ட நாட்களாகத் தூர் வாரப்படாமல் இருக்கின்றன. அந்தத் தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்றி, அந்தக் குளங்களைத் தூர் வாரிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு தனியார் ஆக்கிரமிப்பு இருப்பின், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, நீர் வருவதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி தொகுதியில் பன்னிரண்டாயிரத்திற்குமேல் உள்ள விவசாயப் பெருமக்கள்

2012 ஏப்ரல் 17]

பயன்பெறுகிற வகையிலே, பெருமாள் ஏரியை ஆழப்படுத்தி, கால்வாய்களைச் செப்பனிட்டுத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்னிரண்டாயிரம் விவசாயிகள் பயன்பெறுகிறார்கள் என்று உறுப்பினர் சொன்னார். பன்னிரண்டாயிரம் விவசாயிகளும் பயன்பெறுவார்களானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தப் பணி நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பு. வெற்றிவேல் அவர்கள்.*

திரு. பு. வெற்றிவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், டெல்லி மாநகருக்குச் சென்று, தமிழகத்தின் உரிமைக்காகப் போராடி வெற்றிகரமாகத் திரும்பியிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையிலே, சென்னை மாநகரை நாற்றம் அடிக்கச் செய்யும் கூவம் கால்வாய்க்கு ஏதாவது ஒரு வழியைக் கண்டுபிடித்து அதைத் தூர் வார வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கருணாநிதி ஆட்சியைப்போல் இல்லாமல், 'கூவம் மணக்கிறது', 'படகு விடுகிறேன்', 'கப்பல் விடுகிறேன்' என்று சொல்லாமல், தயவு செய்து கூவத்தையும், சென்னையைச் சுற்றியுள்ள மீதி 6 நீர்வழித் தடங்களையும் ஆழப்படுத்தி, இப்போது அங்கே இருக்கின்ற ஆகாயத் தாமரைகளையும் அகற்றித் தர அரசு முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகாயத் தாமரையை அகற்றும் பணி விரைவிலே நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாற்று வழியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*

கேட்டிருக்கிறார்கள். மாற்று வழி என்னவென்பதை அவர்கள் கூறினால், அந்த வழியைப் பின்பற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.*

திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2001 முதல் 2006 வரை ஆட்சி செய்கின்றபோது, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கிருஷ்ணகிரி வலதுபுறக் கால்வாயை நீட்டிப்பதற்காக 7 கோடியே 6 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, 34 ஏரிகளுக்குத் தண்ணீர் வருகின்ற நிலையை உருவாக்கி, திண்டல் ஏரித் திட்டம் தந்தார்கள். அதேபோல, கிருஷ்ணகிரி அணையினுடைய மேல் பகுதியில் சுமார் 12 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள எண்ணேக்கல்புதூரிலிருந்து 36 ஏரிகளுக்குக் கால்வாய் அமைத்து, இறுதியாக தும்பலஹள்ளி அணைக்கு அந்த நீர் செல்கின்ற வகையிலே உருவாக்கித் தர மாண்புமிகு அம்மா அவர்களிடம் முன்மொழிவு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய நிலை என்னவென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப்பற்றி பரிசீலனை செய்து, பின்னர் தெரிவிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, இந்த 2012–2013 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நீர்வள மேலாண்மைப் பணிகளுக்கென இதுவரை இல்லாத உயர் ஒதுக்கீடாக 3,624.73 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நேரத்தின் அருமை கருதி, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மு.வீ. கருப்பையா, திரு. ஏ.ஏ. கருப்பசாமி, திரு. கா.கோ. ரமேஷ், திரு. மு. முருகன், டாக்டர் சி. விஜயபாஸ்கர் மற்றும் திரு. அ. பாப்பா சுந்தரம்*

ஆகியோர் தங்களுடைய கோரிக்கையை அமைச்சர் அவர்களிடம் கொடுத்தால், நிச்சயமாக அவர் பரிசீலனை செய்வார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

107—

தேர்வு மையம்

***5316—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, பாரூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வு மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பர்கூர் தொகுதி, பாரூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மார்ச் 2012–ல் மேல்நிலைத் தேர்வுக்குப் புதிய தேர்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய மையத்தில் தற்போது 364 மாணவர்கள் தேர்வு எழுதியுள்ளார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் ஒன்றியம், பச்சைபெருமாள்பட்டியிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பிற்கான தேர்வு மையம் இல்லை. அங்குள்ள மாணவர்கள் முசிறி தொகுதியிலுள்ள மேட்டுப்பாளையம் ஆண்கள்